

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 19.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரசு மணிமண்டபத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச்சிலை, நீதிக்கட்சியின் வைரத்தூண் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை, ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர் அவர்களின் திருவுருவச்சிலை ஆகியவற்றிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மணிமண்டப வளாகத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி உட்பட்ட மலைமேடு பகுதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்து, பொது விநியோகத்திட்ட குடிமைப் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார், ம.சிந்தனைச் செல்வன் எம்.எல்.ஏ. , கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி தங்க ஆனந்தன், ஆத்மா குழு தலைவர் தங்க.ஆனந்தன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாற்றுத் திறனாளி மாணவர்களை

# பொறுப்பு மிக்கவர்களாக உருவாக்க அரசுடன் இணைந்து உதவிட வேண்டும்!

## தருமபுரியில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பேச்சு!



தருமபுரி, அக்.21-

மாற்றுத்திறனாளி மாணவர்கள் வாழ்க்கையில் தலை நிமிர்ந்து நடந்து தங்கள் குடும்ப பாரத்தைச் சுமக்கும் பொறுப்பு மிக்கவர்களாக அவர்களை உருவாக்க அரசுடன் நாமும் இணைந்து உதவிட வேண்டும் என செவித் திறன் குறையுடையோர் அரசு மேனிலைப் பள்ளியின் 50 வது ஆண்டு நிறைவு பொன் விழாவில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்ட மாற்றுதிறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற செவி திறன் குறையுடையோர் அரசு மேல் நிலை பள்ளியின் 50 வது ஆண்டு நிறைவு பொன் விழாவில் கலந்து கொண்டு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பொன் விழா மலரை வெளியிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விருப்ப நிதியிலிருந்து தருமபுரி செவித்திறன் குறையு டையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியின் 105 மாணவர்களுக்கு தலா ரூ.1000/ வீதம் ரூ.1.05 இலட்சம் மதிப்பில் அஞ்சலக சேமிப்பு வைப்புத்தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, முன்னிலையில் வழங்கினார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் பேசியதாவது:

தர்மபுரியில் செயல்பட்டு வரும் இந்த மாற்றுத் திறனாளிகள் பள்ளி 50 ஆண்டுகளை பூர்த்தி செய்து பொன்விழா கொண்டாடுகிறது. இந்த ஊரே இந்த பள்ளியை தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். மனசாட்சியுடன் இந்த பள்ளியின் வளர்ச்சிக்காக நாம் பங்களிப்பை செலுத்த வேண்டும். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உடல்உறுப்புகளும், மனவளர்ச்சியும் குன்றிய நிலையில் வாழ்ந்தவர்களுக்குப் புத்துணர்வும் புது வாழ்வும் அளிப்பதற்காக ஊனமுற்றவர் என்ற சொல்லை நீக்கி, மாற்றுத்திறனாளிகள் என அவர்களுக்குப் பெயர் தந்து அவர்கள் நலன்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின்கீழ் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை என 27.3.2010 அன்று தனியே ஒரு துறையை புதிதாக ஏற்படுத்தி, அதை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்து அதன்மூலம் பல்வேறு சிறப்புத் திட்டங்களை உருவாக்கி எண்ணற்ற சலுகைகளை வழங்கினார். அவர் வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சி அடையும் நோக்கில், மாற்றுதிறனாளிகள் துறையினை தனது நேரடி கண்காணிப்பில் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கென எண்ணற்ற திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தப் பள்ளியின் மேம்பாட்டிற்காக பலர் ஏற்கனவே பல்வேறு உதவிகளை செய்து இருக்கிறார்கள். தற்போது தர்மபுரி எம்.பி.தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சத்தை இந்தப் பள்ளியின் மேம்பாட்டிற்கு வழங்குவதாக அறிவித்துள்ளார். இலக்கியம் பட்டி ஊராட்சி மன்ற கவுன்சிலர் சாந்தி காவேரி தனது சொந்த நிதியிலிருந்து ரூ.50 ஆயிரத்தை இந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக வழங்குவதாக அறிவித்துள்ளார். இது போல் நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற உதவியை இந்த பள்ளிக்கு செய்ய வேண்டும்.

இந்த பள்ளியில் படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் வாழ்க்கையில் தலை நிமிர்ந்து நடந்து தங்கள் குடும்ப பாரத்தை சுமக்கும் பொறுப்பு மிக்கவர்களாக உருவாக நாம் மனமார உதவி செய்வதில் முன்னிலை வகிக்க வேண்டும். இவர்களுக்கு உதவுவதில் நமக்குள் ஆக்கபூர்வமான போட்டி மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தில் 27185 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மன வளர்ச்சி குன்றியோருக்கான உதவித் தொகை ரூ.1500ல் இருந்து ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. கல்வி உதவித்தொகை, இலவச பஸ் பயணம், முதுகு தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டமும், சுய தொழில்புரிய மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கி கடனுடன் கூடிய மான்யம் வழங்கும் திட்டமும்,இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டமும்,அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும், பார்வையற்றோர், காது கேளாத மற்றும் வாய் பேசாத மாற்றுத்திறனாளிகளுக்கு செல்போன் வழங்கும் திட்டமும், இரு சக்கர நாற்காலி, மூன்று சக்கர சைக்கிள், கருப்பு கண்ணாடி போன்ற உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதோடு தர்மபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலை வாய்ப்பு முகாமை விரைவில் நடத்தி பல்வேறு நிறுவனங்களில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சர் எம். ஆர். கே.பன்னீர்செல்வம் பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.என்.பி.இன்பசேக ரன், கே.மனோகரன் நகர்மன்ற தலைவர் லட்சுமி மாது, மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, கைம் பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி,தருமபுரி தொகுதி பொறுப்பாளர் டாக்டர்.ஏ.கே. தருண்,ஒன்றிய செயலாளர்கள் இல.கிருஷ்ணன், எம்வீடி.கோபால், ஏரியூர் செல்வராஜ்,சிவப்பிரகாசம்,பி.எஸ்.சரவணன்,முத்துக்குமார்,சந்திரமோகன், வேடம்மாள்,ரத்தினவேல், அன்பழகன், மாது, சபரிநாதன் மற்றும் முன்னாள், இந்நாள் மாநில,மாவட்ட நிர்வாகிகள்,பேரூர் கழக செயலாளர்கள், பேரூராட்சி தலைவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் திருமதி. தே.ஜெனிலாஜோன்ஸி, அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மேல்மாளிகைப்பட்டு சி.மன்மதன் இல்ல புதுமனை புகுவிழா!

## அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் - டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர் அக்: 20

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்; கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்,கழக இளைஞரணி செயலாளர்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துக்களுடன் திரு வள்ளூர் கிழக்கு மாவட்டம், மேல் மாளிகைப்பட்டு கிராமம் கழக செயல்வீரர் சி. மன்மதன் வேண்டா ஆகியோரின் இல்ல புதுமனை புகுவிழா நிகழ்ச்சி, 47, ஏனம்பாக்கம் ஊராட்சி மேல்மாளிகைப் பட்டு கிராமத்தில் இன்று 21.10.2024 திங்கட் கிழமை நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளரும் தலைமை பொதுக்குழு உறுப்பினருமான பி.ஜெ. மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ்,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் கா.சம்பத்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் என். கிருஷ்ண மூர்த்தி, மின் கழக தொ.மு.ச. மாநில பிரச்சாரக் குழு செயலாளரும் தெற்கு மாவட்ட திட்டக்குழு துணைத் தலைவருமான விருகம்பாக்கம் எம். பி. வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.



கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் , மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், ஆகியோர் முன்னிலையில் 423 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கௌரிசங்கர், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி ,நகர மன்ற தலைவர் பரிதா நவாப் , ஒன்றிய செயலாளர் தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யமொழி பேசினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், மாநில சார்பு அணி நிர்வாகிகள் எஸ்.கே.வேதரத்தினம், என்.வி.காமராஜ், ஜி.மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம் மற்றும் பலர் உள்ளனர்.

### வடகிழக்கு பருவமழை: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில்

# மயிலாடுதுறையில் முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.முருகன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

மயிலாடுதுறை, அக். 21 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 15.10.2024 அன்று மாலை பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மாவட்ட கண்காணிப்பு (கணிப்பாய்வு) அலுவலரும், அரசு அருங்காட்சியகம் இயக்குநர் கவிதா ராமு, மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக வருவாய்த்துறை, காவல்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்சார வாரியம், சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை,கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களிடம் அமைச்சர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு கூட்டம் இன்றைய தினம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 4 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளது 11 புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் தற்காலிக நிவாரண மையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் 362 திருமண மண்டபம் 146. சமுதாய கூடம்58 ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

புயல் மற்றும் மழை தொடர்பான எச்சரிக்கைகளை அளித்திட 25 கடற்கரை கிராமங்களில் எச்சரிக்கை கருவிகள் அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் அதிகமாக பாதிக்கக்கூடிய இடங்களாக 12 பகுதிகள், அதிகம் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் 33 குறைந்த அளவு பாதிக்கக்கூடிய பகுதிகள் ஆக மொத்தம் 201 பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4500க்கும் அதிகமான முதல்நிலை பொறுப்பாளர்கள் அனைத்து வட்டங்களிலும் பயிற்சியளிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளார்கள். புயல் மற்றும் மழை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை உடனடியாக அகற்றி இயல்பு நிலை ஏற்படுத்திட ஏதுவாக அனைத்து துறை களிலும் ஜெ.சி.பி. 85. ஜெனரேட்டர்கள் 164, பவர் சா 57, ஹிட்டாச்சி 31, ஆயில் என்ஜின்கள் மணல் மூட்டைகள் 40351, மரம் அறுக்கும் கருவிகள் 84, சவுக்கு கம்பங்கள், 34110, பிளிச்சிங் பவுடர் 5870 கிலோ ஆகியவன போதிய அளவில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வட்ட அளவிலான முன்னெச்சரிக்கை மற்றும் இடம் பெயர்தல் குழு, தேடுதல் மற்றும் மீட்பு க் குழு, தங்குமிடம் மற்றும் பாரமரிப்புக்குழு ஆகிய குழுக்கள் ஒவ்வொரு வட்டத்திற்கும் 10 அனைத்துத் துறை அலுவலர்களைக் கொண்ட தனித்தனியான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி 4 வட்டத்திற்கும் துணை ஆட்சியர்கள் தலைமையில் ஒரு வட்டத்திற்கு 3 குழுக்கள் வீதம் மொத்தம் 12 தனித்தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டு பணியில் உள்ளார்கள்.

தாழ்வான மின்கம்பங்கள் இழுத்து கட்டப்பட்டுள்ளது. மின் பாதையில் இடையூராக இருந்த மரங்கள் மற்றும் கிளைகள் 2320 அகற்றப்பட்டுள்ளது. 5600 மின்கம்பங்கள் இருப்பு உள்ளது. மின்மாற்றிகள் 44 மற்றும் 52 கி.மீ மின் கம்பிகளும் அவசர காலத்திற்கு பயன்படுத்திட கை இருப்பில் உள்ளது. வெள்ளம் மற்றும் மழையின் போது நாய் கடி மற்றும் பாம்பு கடித்தால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வுனு தடுப்பூசி, ரேபிஸ் தடுப்பு தடுப்பூசி மற்றும் பாம்பு எதிர்ப்பு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டம் வடகிழக்கு பருவமழை 2024 ஆம் ஆண்டு

மழைபுயல், வெள்ளம்,இடி மின்னல் போன்ற இயற்கை இடர்பாடுகள் தொடர்பான அனைத்து புகார்களையும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர்; அலுவலக கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண் 04364222588 மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் 043641077 என்ற எண்களுக்கு பொதுமக்கள் புகார்களை தெரிவிக்கலாம். மேலும் காவல்துறை கட்டுப்பாட்டு அறையினை தொடர்பு கொள்ள 9442626792 என்ற எண்ணிலும், மின்சாரத்துறை கட்டுப்பாட்டு அறையினை பொருத்தவரை மயிலாடுதுறை கோட்டத்திற்கு 04364252218, 9498482319 என்ற எண்ணிலும், சீர்காழி கோட்டத்திற்கு 04364 279301,9445854006 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டு அறையினை பொருத்தவரை மயிலாடுதுறை கோட்டத்திற்கு 04364222277, 8668171501 என்ற எண்ணிலும், சீர்காழி கோட்டத்திற்கு 04364 276336, 9842382883 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

தொடர்ந்து கடந்த 24.08.2024 அன்று திருவாலங்காடு வெடி தயாரிக்கும் இடத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த குமார் என்பவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்கள் பொது நிவாரண நிதியின்கீழ் ரூ.3 லட்சத்திற்கான காசோலையையும், படுகாயமடைந்த கலியபெருமாள் என்பவருக்கு ரூ.1 லட்சத்திற்கான காசோலையையும் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். முத்து.மகேந்திரன். இராம. இளங்கோவன், மாவட்ட துணை செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ்செல்வமணி,பொருளாளர் மகா அலெக்சாண்டர், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன். ஒன்றிய கழக செயலாளர் பி. எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்தா. விஜயகுமார், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, பஞ்சு. குமார், ஏ.ஜி.ஜே. பிரபாகர், பேரூர் செயலாளர்கள், அண்ணாதுரை, சம்சுதீன்,பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், கென்னடி, சுபாநெடுஞ்செழி யன், மயிலாடுதுறை ஒன்றியக் குழுத்தலைவர் காமாட்சி மூர்த்தி, குத்தாலம் ஒன்றியக்குழு தலைவர் .மகேந்திரன், கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ், செம்பனார்கோவில் ஒன்றியக் குழு தலைவர் .நந்தினி ஸ்ரீதர், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி,குத்தாலம் பேரூராட்சி தலைவர் .சங்கீதா மாரியப்பன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி தலைவர் பூங்கொடி, மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள்,உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.